# சங்கிலிச் சித்தர் பாடல்கள் உணர்த்தும் மெய்ஞ்ஞானச் சிந்தனைகள்

16

**முனைவர் கோ. பிரேமா,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**பி.எஸ்,ஜி கலை அறிவியல் கல்லூரி,**
**கோயம்புத்தூர் – 14.**
premasakthivel8385@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தத்துவ அறிஞர்கள் அந்தக்கரணங்களாகிய மனம், சித்தம், புத்தி, அகங்காரம் எனும் நான்கில் சித்தம் என்பது சிந்திக்கும் என்று கூறுவர். சச்சிதானந்தம் என்பதும் சத்து, சித்து, ஆனந்தம் என பிரித்து சித்தத்தின் நிலையை உரைத்திடும். ஐம்புலன் ஒடுக்கி சித்தத்தை சிவம் மீதும் சீவன் மீதும் வைத்து ஞானப்பேற்றினை எய்துபவர்கள் சித்தர்கள். உடலியல், மனவியல், உணவியல், மருத்துவவியல், அண்டவியல், யோகம், மந்திரம், இரசவாதம் என்பவாறு விஞ்ஞானம், மெய்ஞ்ஞானமென அனைத்து நிலைகளிலும் சித்தர் பண்பாடு நிலைநிறுத்தப்படுகின்றது. உயிர், உடல், மனப் பக்குவங்களை அறிந்ததுடன் அதனை மக்களுக்கும் பாடல்களாக விட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் பாடல்களில் சில வெளிப்படைத் தன்மையிலும் பல உட்பொதிந்த பொருள்களைக் கொண்டும் அமைந்திருக்கும். அவ்வகையில் சங்கிலிச் சித்தர் பாடல்கள் முப்பத்தாறில் காணப்படும் மெய்ஞ்ஞானச் சிந்தனைகளை ஆராயும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரையானது அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** சித்தர், சங்கிலிச் சித்தர், தத்துவங்கள், மெய்ஞ்ஞானம், சித்தம், சித்தர் நெறி

**முன்னுரை**

ஒரு சமூகத்தின் பண்பாடும் பாரம்பரியமும் அம்மக்களின் சுயத்தை வெளிப்படுத்துவன. சுயம் மாறாமல் காத்தவர்கள் முன்னோர்கள். பண்பாட்டின் அனைத்து தன்மைகளிலிலும் பின்பற்றப்பட்டும், பண்பாட்டைக் கடத்துபவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் வரும் நியதிகளானவை மரபுகள் என்றழைக்கப்படுகின்றன. மக்கள் தொடர்பு நிலைகளில் இருக்கும் பல்வேறு மரபுகளில் சித்தர் மரபும் ஒன்று. காலம் கடப்பினும் சித்தர் மரபு பிளவுபடாமல் இருத்தலுக்கான காரணம், அடுத்து வரும் சந்ததிகளுக்குக் கடத்தும் நிலை இருத்தலும், தன் இருப்பின் நிலையினைத் தக்கவைத்து நிரூபித்தலுமாகும். சித்தர் மரபில் பதினெண் சித்தர்கள் என்ற கணக்கீட்டில் பல்வேறு சித்தர்கள் இருத்தப்படுகின்றனர். அவர்களின் பாடல்களும் பல மக்களிடையே பரவி வேரூன்றியுள்ளன. அவ்வகையில் சங்கிலிச் சித்தர் என்றழைக்கப்படும்

மதங்கநாதரின் பாடல்களில் விரவிக்கிடக்கும் மெய்ஞ்ஞானச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகின்றது.

**சங்கிலிச் சித்தர்**

சங்கிலிச் சித்தரின் பாடல்களின் இறுதியடி 'ஆனந்தப் பெண்ணே' என்று முற்று பெற்றிருக்கும். ஆனந்தம் என்பது ஞானத்தின் வழியாவது. பேரானந்தத்தைக் குறிப்பது. சிற்றின்பம் கொள்ளக் கூடிய உயிர்கள் பேரின்பஞானம் பெறுவதற்கு அவ்வாறு உரைக்கப்படுகின்றது. சித்தர் பாடல்களைத் தொகுத்து, சிலவற்றிற்கு உரை கண்டு தொகுப்பித்த ஆசிரியர் சி.எஸ். முருகேசனின் கூற்றுப்படி, சங்கிலிச் சித்தரின் வரலாறு தெரியவில்லை. இவரின் உண்மைப் பெயர் மதங்கநாதர் என்பதும் இவரின் காலம் பதினைந்தாம் நூற்றாண்டு என்பதும் மட்டுமே காணக் கிடைக்கின்றது. - (https://www.tamilvu.org) முண்டக விருட்சக் கற்பம் பற்றிக் குறிப்பிடுகையில் கொங்கண முனிவர் ஆச்சிரமம் போய்விட்டு வரும் வழியில் சங்கிலிச் சித்தரின் ஆச்சிரமம் இருந்த செய்தியை **கோரக்கர் மலைவாகடம் நூல்** குறிப்பிடுகின்றது. சுவாமிமலைக்கும் உடுமலைக்கும் இடையே சங்கிலிச்சித்தர் ஆச்சிரமம் இருந்துள்ளதாக அந்நூல் காட்டுகின்றது.

"காஞ்சன பருவதம் கொங்கு மலை சங்கிலிச் சித்தர் ஆச்சிரமம். கேளுங்கள் முனிவர்களே! அந்தச் சதம்புத் தரைக்கு வடப்பக்கம் போகிற பாதையில் கொங்குநாட்டு மலையிருக்கிறது. அம்மலைக்குப் பக்கத்தில் காலாஞ்சிப் பாறையிருக்கிறது. அந்தப் பாறையின் மேலேறிப் பார்த்தால் பக்கத்திலிருக்கிற நாடுகளெல்லாந் தெரியும். அந்தப் பாறைக்கு வட பக்கம் ஒரு நாழிகை தூரத்தில் கானாறு வருகிறது. அந்த ஆற்றைக் கடந்து அம்பிடு தூரம் போனால் சங்கிலிச் சித்தர் ஆச்சிரமமிருக்கிறது. அந்த ஆச்சிரமந்தான் கொங்கணச் சித்தர் ஆதியில் வாசஞ் செய்த இடமாகும்" - (இ.ராம. குருசாமிக்கோனார் (ப.ஆ), மலைவள சாஸ்திரமென்னும் கோரக்கர் மலை வாகடம், ப.125). **சங்கிலிச் சித்தர் பாடல்கள் 36, சங்கிலிச் சித்தர் ஞானசூத்திரம் 16** ஆகிய இரண்டு நூல்கள் இவர் இயற்றியதாகக் கிடைக்கப்பெறுகின்றன. சங்கிலிச் சித்தர் பாடல்கள் 36 நூலில் அமைந்துள்ள பாடல்கள் கும்மிப்பாட்டின் வடிவில் அமைந்திருக்கும். 'மனம் அடங்கும் கலையே வாழ்வு; மற்றவை வீழ்வு' என்பது இவர் கொள்கையாக உள்ளது.

**கும்மி வகை**

தமிழ் இலக்கியங்களில் வழங்கி வரும் சிந்துப் பாடல்களும் கும்மிப் பாடல்களும் எளிதாக மக்களிடையே சென்று சேர்வனவாகும். சிந்துப் பாடல்கள் தாளத்தோடும் அமைந்திருக்கும். தாளமின்மையாகவும் அமைந்திருக்கும். ஆனால் கும்மிப் பாடல்கள் யாப்பின் முறைமையுடன் அமைந்திருக்கும். சங்கிலிச் சித்தரின் பாடல் கும்மிப்பாடல் வகையினது என்பர். கும்மிப் பாடல்கள் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துகளை இயம்பி நெறிப்படுத்தும் பணியைச் செய்யும். கும்மிப் பாடல்களுக்கென்று தனியாக வெண்பா முறையில் இலக்கணம் அமைவதால் இக்கும்மி, இயற்கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக்கும்மி என்று மூன்று வகையான பாவடிவம் கொண்டிருக்கும். - (https://www.tamizhkalam.com/kummi/) இயற்கும்மி என்பது, 'ஓரடியில் ஏழு சீர்கள் அமைந்து, 4

சீர், 3 சீர் என மடக்கி எழுதப்படும் முறையாகும். இதில் முதற்சீரும் மூன்றாம் சீரும் மோனை பெற்று, மூன்றாம் சீரும் ஏழாம் சீரும் இயைபுத் தொடை அமையப் பாடப்பெறுவதாகும். இதில்லாமல் இரட்டைக்கும்மி என்ற வகைமையும் உண்டு. சங்கிலிச் சித்தர் பாடல் இயற்கும்மி வகையினதாக அறியப்படும்.

**யோகஞான சாரத்தில் முன்னோரைப் பின்பற்றுதல்**

சித்தாந்தம் குறிப்பிடும் நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சித்தர்கள் சரியை, கிரியை வழிபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. உடல், உயிரும் சம்பந்தப்பட்ட ஒன்றாதலால் யோகநிலைக்கே முதன்மையைக் கொடுக்கின்றனர். ஏனெனில் வழிபாடு என்பது அகநிலை வழிபாடு, புறநிலை வழிபாடு, பரார்த்த வழிபாடு என வகைப்படுத்தப்படும். இவற்றில் அகநிலை வழிபாடு யோகத்தையும் ஞானத்தையும் கொண்டிலங்குவது. சித்தர்கள் உருவ வழிபாடுகளையும் சடங்கு முறைகளையும் புறந்தள்ளுகின்றனர். சங்கிலிச் சித்தரும் தம் பாடல்களில் இவற்றை அறிவுறுத்துதைக் காணமுடிகின்றது. பாடலின் தொடக்கத்தில் கணபதி, வாலை திரிபுரை அம்பிகை பாத வணக்கம் (பா.எ.1) இடம்பெறுகின்றது. பின்பு வரும் பாடலான,

**“எங்கள் குருவாம் திருமூலர் பாதம்**
**எப்போதும் போற்றித் துடித்தோன்**
**சங்கைகள் அற்றமா சித்தர்கு ழாங்களின்**
**தாளைப் பணிவாய் ஆனந்தப் பெண்ணே”** - (பா.எ.2)

என்பதில் சங்கிலிச் சித்தர், திருமூலரைக் குருவாக ஏற்றுக் கொண்டும் அவர்வழி வந்த சித்தர்களை வணங்கியும் செயல்படவேண்டும் என்பதை அறிவுறுத்துவதுடன், என் பாட்டன் போகசிஷி (ச.சி.பா.எ. 27) என்று போகரை முன்னிருத்துவதையும் உணரலாம்.

சரியையையும் கிரியையும் கடந்து நின்றாலும் யோகத்தை சாதித்தாலும் **ஞானவி சர்க்கம்** இல்லாவிட்டால் பயனில்லை (பா.எ.13) என்பதை எடுத்துரைக்கின்றார். வழிபாட்டிற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் மிகவும் இன்றியமையாதன. இவை மூன்றுமே தேவையில்லை என்கிறார் இச்சித்தர். இம்மூன்று வழிபாடுகளால் ஞானம் கிட்டுமோ? மோன நிலைதான் கிட்டுமோ? (பா.எ.32) என்ற வினாக்கள் தொடுத்தலை அறியமுடிகின்றது.

**உலகமும் நிலையாமையும்**

உலகில் வாழும் உயிர்கள் பல்லாயிரம் கோடி. எத்தனை எத்தனைப் பிறப்புகள் வாய்த்ததோ? வாய்க்குமோ? யாரும் அறிந்திலர். சான்றோர் வாழ்க்கை வாழ்வதைவிட பிறப்புக்கும் இறப்புக்கும் அஞ்சுதலைத் தம் பாடல்களில் எடுத்துரைப்பர். சங்கிலிச் சித்தர் சுமார் பத்துப் பாடல்களில் உலகில் உயிர்களின் பிறப்புகளையும் நிலையாமை கருத்துகளையும் எடுத்துரைத்து விழிப்புணர்வு தூண்டச் செய்கின்றார். இந்த உடலை, ஊத்தைச் சடலம், உப்பிட்ட பண்டம், பீத்தத் துருத்தி (பா.எ.17) என்றுரைப்பதுடன் ஆத்தாள் பெற்றாள், அப்பன் வளர்த்தார்,

வேத்தாள் என நினைக்காமல் நான் சொல்வதைக் கேட்பாயாக (பா.எ.18) என்று அறிவுறுத்துதல் நிகழ்கின்றது.

மணக்கோலம் கொண்டு பல மக்களைப் பெற்றெடுக்கின்றோம். ஆனால் பிணக்கோலம் தொடர்ந்துகொண்டே தான் உள்ளது. அனைத்து உயிர்களுக்கும் இம்மண்ணில் தான் உற்பத்தி. இறந்த பின்னோ மண்ணில் புதையுண்டு மண்ணாக ஆகின்றன உடல்கள். தாயும் சதமாகும். தந்தையும் சதமாகும். ஆனால் உடலைவிட்டு உயிர் போகும் போது எதுவும் சதமில்லை (பா.எ.25) என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். இந்த உடலே பெரிது என்று பார்த்து வாழ்கின்றோம். அதனை அழகுபடுத்தி வாழ்கின்றோம். 'சொந்தச் சடலம் எதுவெனப் பார்த்திடில் சுத்தமாய்க் காணோம்' - (பா.எ.19) என்பதிலிருந்து நிலையாமைக் கருத்து வெளிப்படுகின்றது.

**"மண்ணில் பிறந்தது அழிந்துவிடும் பார்த்து**
**வைத்த பொருளும் அழிந்துவிடும்**
**கண்ணினில் காண்பது அழிந்து விடுமென்று**
**கண்டறிந்து கொள் ஆனந்தப் பெண்ணே"** - (பா.எ.24)

உலகில் அனைவரும் இருப்பர்தான். ஆனாலும் தவம் செய்யவில்லையெனில் அனைவரும் எமனுக்குச் சொந்தமாவோம் (பா.எ.31). இந்த உலகம் மாயையால் ஆனது. வஞ்சத்தால் நிறைந்தது. வஞ்சியர் மீதுள்ள மோகமும் உலக மயக்கமும் தீய மாந்தரின் உறவும் வீடுபேறு அடைவதற்குத் தடையாகும். (பா.எ.34) என்று உலகியலைக் காட்டுகின்றார். இறைவனுக்கு ஆகாத ஐந்து தீட்டுகளாக, காமம், கோபம், சுயநலம், கர்வம், பொறாமை போன்றவற்றைக் குறிப்பிடுவர். இதனைப் 'பஞ்சமாபாதகங்கள்' என்று அமைப்போம். இவற்றையும் சித்தர்கள் கண்ணுற்றே மக்களுக்கு விழிப்புணர்வு பெறச்செய்ய விழைகின்றனர்.

**உடலும் தவமும்**

சித்தர்கள் உடலைப் பேணுவதை முன்னிருத்துவர். திருமூலர் 'ஊனுடம்பு ஆலயம்' என்று கூறும் கூற்று அனைவரும் அறிந்த ஒன்றே. தவத்தின் நிலை எய்த உடல் வேண்டும். கொங்கணச் சித்தர் தனது வாலைக்கும்மியில் 'ஊமை எழுத்து உடலாச்சு, ஓம் என்ற எழுத்து உயிராச்சு' – (கொங்கணச் சித்தர், வாலைக்கும்மி, பா.எ.14) என்றுரைப்பார். ஈண்டு, சங்கிலிச் சித்தரோ,

**"ஓங்கார வட்டம் உடலாச்சு பின்னும்**
**ஊமை எழுத்தே உயிராச்சு**
**ரீங்காரம் ஸ்ரீங்கார மான வகையதை**
**நீதா னறிவாய் ஆனந்தப் பெண்ணே"** - (பா.எ.3)

என்றும்,

**"அகாரம் உகாரத் துடன்பொருந்த அது**
**யகார மானது அறிந்துகொண்டு**
**சிகார மான தெளிவினி லேநின்று**
**தேர்ந்து கொள்வாய் ஆனந்தப் பெண்ணே"** - (பா.எ.4)

என்றும் எடுத்தாள்கின்றார்.

அகார உகார மகரங்கள் இணைந்து ‘ஓம்’ என்பதாயிற்று. ஊமை எழுத்து என்பது என்பது ‘சி’ யைக் குறிக்கும். சிகரம் சிவமயம். இதனை **‘ஊமையெழுத்து மந்திரம்’** என்றும் **‘பேசாத மந்திரம்’** என்றும் அழைப்பர். ‘நமசிவய’ என்ற மந்திரத்தில் ந - திரோதான சக்தியையும், ம - ஆணவ மலத்தையும், சி - சிவமயமாயிருப்பதையும், வா - திருவருள் சக்தியையும், ய – ஆன்மாவையும் குறிக்கும். அட்சரங்கள் 51. அதில் அகரமே முதன்மையானது. பிரணவத்தை அறிந்து, பிரபஞ்சத்தை அறிந்து, உயிரை அறிந்து, சிவத்தை அறிய வேண்டும். சீவமே சிவமாகும் என்பது சித்தர் வாக்கு.

உடலானது பஞ்சபூதங்களால் ஆனது. ஐம்புலன் ஒடுக்கம் கொண்டு மோன நிலையைப் பற்றி நின்று சிவத்தை அறிய ஆணையிடுகின்றார் சங்கிலிச் சித்தர். மேலும் நவ சித்தாதிகள் கண்டு தெளிந்ததை அறிந்து கொண்டு வாசிநிலையைப் பின்பற்றி, உந்திக் கமலத்தில் அந்தணன் பீடத்தை உற்றறிந்து கொள்ள வேண்டும் என்றவாறு எடுத்துரைக்கின்றார். அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற அட்டமாசித்திகளையும் பெற்றவர்கள் சித்தர்கள். ஆகையால் நவசித்தாதிகள் என்று இவர் யாரை, எதனைக் குறிப்பிடுகின்றார் என்பது ஈண்டு கேள்வியாகின்றது. நவநாத சித்தர்கள் என அழைக்கப்படக்கூடிய அகத்தியர், காகபுஜண்டர், தன்வந்திரி, போகர், வசிஷ்டர், கௌசிகர், பிருகு, நந்தீசர், சுகபிரம்மர் ஆகியோர் கண்டு தெளிந்ததை அறிய உரைக்கின்றாரா என்பது சிந்திக்க வைக்கின்றது. ஏனெனில் ‘பாட்டன் போகன்’ என்று ஒருபாடலில் உரைப்பதை முன்பே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அகப்பற்றும் புறப்பற்றும் சஞ்சலமும் இல்லாது இருந்தால் தான் தன்னையும் அறியமுடியும். சிவத்தையும் அறியமுடியும். ‘உந்திக் கமலத்தில் அந்தணன் பீடத்தை அறிதல், மாலுந் திருவும் வசித்திருக்கும் இடமறிதல், உருத்திரன் ருத்திரி சேவையை அறிதல்’ (பா.எ.8, 9) என்று கூறும் கூற்றுகள் பிரம்மன், திருமால், ருத்ரன் வசிக்கும் உடலை மையமிட்டுக் காட்டுகின்றன. உச்சியில் விளங்கும் குண்டலினி சக்தி பிரம்மனையும், புந்தியில் இருக்கும் குண்டலினி சக்தி (இதுவே பெண்ணின் கருவறையில் தங்கி குழந்தையாக உருவெடுக்கின்றது) திருமாலையும் இவ்வுடல் சிவத்தையும் குறித்து தெளிவடையச் செய்கின்றன. மேலும், ‘ நந்தி கொழுவை அறிந்தோர்கள் வாசி நாட்டம் விடார்கள்’ (பா.எ.8) என்பது,

**“நந்தி கொலுக் கண்டவனே ஞானியாகும்**
**நடுவனையைப் பார்த்தவனே சித்தனாகும்”**

என்ற காகபுசுண்டரின் கூற்றினைப் பிரதிபலிக்கின்றது. பொதுவாக நந்தி என்பது சிவன், சீவன் என்ற இரண்டையும் குறிக்கும். ஈண்டு இது, ‘உ’கரமான ஏகாட்சரத்தை எடுத்துக்காட்டுகின்றது.

அகத்தியரும் தேகத்தில் ஓர் எழுத்தைக் காண்பவன் ஞானி என்று சுட்டிக்காட்டுகின்றார். ஏகத்தை அறிந்தாலும் சிந்தையை அடக்கும் உபாயமறிந்தவனே சதாசிவனின் சீர்பாதம் அடையமுடியும் (பா.எ.10) என்று அறுதியிட்டு உரைக்கின்றார் சங்கிலிச் சித்தர்.

**யோக சித்தத்தில் வாழும் வழி**

சித்தர்கள் யோக முறைமையில் தலைச்சிறந்தவர்கள். மத மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். சாதிகளைச் சாடுபவர்கள். உடல், மனம் இரண்டையும் ஒருமுகப்படுத்தி, இரண்டையும் மோனநிலையில் செலுத்தி ஞானத்தில் திளைத்தவர்கள். உயிர்கள் பல்வேறு உடல்களைக் கொண்டாலும் சுழிமுனையை அறிந்து (பா.எ.28) சுகவழி கண்ட சித்தர்களைப் பின்பற்றி, ஆசையை ஒழித்து, ஆண்மையைச் சுட்டறுத்து, பாசத்தை விடுத்து (பா.எ.29), ஏக வெளியை அறிய முற்பட வேண்டும். அப்போது தான் மீண்டும் பிறவா நிலை கிட்டும். இதனையே,

**“காடு மலைகள் அலைந்தாலும்**
**கன்மானுட் டானம் புரிந்தாலும்**
**ஓடுஞ்சித் தத்தை நிறுத்தார்க்குப் பர**
**உற்பனம் வாய்க்காது ஆனந்தப் பெண்ணே”** - (பா.எ.33)

என்கிறார் சங்கிலிச் சித்தர். எக்கலைகள் அறிந்தாலும் ஞானவழிகள் தெரிந்தாலும் மோனம் வாய்க்காமல் இருப்பின் எப்பலனும் வாய்க்கப்பெறாது என்பதை தம் முப்பத்தைந்தாம் பாடலில் சுட்டிச்செல்கின்றார். உடலும் மனமுமாகிய இரண்டும் கொண்ட மோன நிலை மிகவும் முக்கியத்துவம் பெறுவதை இதன் மூலம் அறியலாம்.

**“தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்**
**சென்னியில் வைத்த சிவன்அரு ளாலே”.**

- (திருமூலர், எட்டாம் தந்திரம், ஞானியின் செயல், பா.எ.2611)

என்ற திருமந்திரப் பாடல் தத்துவ ஞானிகளின் மேன்மையை எடுத்துக்காட்டுகின்றது. மாணிக்கவாசகர் ‘அவனருளாலே அவன் தாள் வணங்கி’ என்றுரைப்பார். இங்கு திருமூலர், ‘சென்னியில் வைத்த சிவனருளாலே’ என்று குறிப்பிடுகின்றார். இச்செய்திகள் சிறந்த குரு வாய்க்கப்பெறும் போதும், அவனருள் ஆன்ம நிலையில் எய்தும் போதும் ஞானமானது விலகாமல் கூடும் என்பதைத் தெளியப்படுத்துகின்றது.

**தொகுப்புரை**

சித்தர்கள் என்போர் சிவத்தை அறிந்தவர்கள். சீவத்தை உணர்ந்தவர்கள். அவ்வகையில் சங்கிலிச் சித்தரும் முன்னோரான சித்தர் மரபைப் பின்பற்றி வாழ்ந்தவர் என்பதை இவரின் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. கொங்கணவர், காகபுசுண்டர், திருமூலர் போன்ற பல்வேறு

சித்தர்களின் கருத்துகளைச் சங்கிலிச் சித்தர் அறிந்த வகையிலும் தெளிந்த நிலையிலும் எளிமையான நடைப்பாங்குடன் கும்மி இலக்கிய வடிவில் நமக்கு கொடுத்துச் சென்றுள்ளார். நிலையில்லாததை விட்டு, நிலையானதைத் தக்க வைத்துக்கொள்ள சித்தர்கள் அறிவுறுத்துகின்றனர். அவ்வகையில் அட்டமாசித்திகளை அடையச் சித்தர்கள் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவற்றைக் கடைப்பிடிக்கனர் என்பதையும், அவற்றை நீக்கமற பின்பற்றி அனைவரும் ஞானநிலையை அடைவதற்கு முற்படல் வேண்டும் என்பதையும் சிந்திக்கும் வண்ணம் சங்கிலிச் சித்தரின் பாடல்கள் வழிகாட்டியாக அமைந்துள்ளன என்பது திண்ணம்.

**துணைமை ஆதாரங்கள்**


1. குருசாமிக்கோனார். இ.ராம.(ப.ஆ)., கோரக்க மகரிஷி நாகார்ச்சுனாதி முனிவர்களுக்கு திருவாய்மலர்ந்தருளிய மலைவளமென்னும் மலைவாகடம், ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ், மதுரை. (1940).
2. சண்முகவடிவு. ந, சித்தர்கள் காட்டும் சமுதாயம், மணி ஆப்செட், சென்னை. (2007).
3. சூரியமூர்த்தி. எஸ், சிந்தனைக்குத் தெளிவு தரும் சித்தர் பாடல்கள், நர்மதா பதிப்பகம், சென்னை. (2012).
4. சோமசுந்தரம். மீ.ப., சித்தர் இலக்கியம் (முதல் தொகுதி), அண்ணாமலைப் பல்கலைக்கழகம். (2004).

Websites

1. https://www.tamilvu.org
2. https://www.tamizhkalam.com/kummi/
3. https://www.shanlaxjournals.in/pdf/TS/V3N1/ts_v3_n1_i1_014.pdf - நாகராஜன்.மு, சித்தர்கள் காட்டும் வாழ்வியல் முறைகள் (கட்டுரை)
4. http://www.muthukamalam.com/essay/general/p173.html - உஷா.ஆ, சித்தர்கள் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்.